# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.72/2022 | Date | : 06.09.2024 |
| Deposition of Witness for | : அ.சா.7 | Taluk | : |
| Name | : டாக்டர். முருகவேல் | Calling | : |
| Father / Husband Name | : | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 06.09.2024.

(1-ம் எதிரி ஆஜர் இல்லை. 1-ம் எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 2,3,4-ம் எதிரி ஆஜர், எதிரிகளின் வழக்கறிஞர் ஆஜர்)

**அரசு தரப்பு முதல் விசாரணை** :

நான் சங்ககிரி அரசு மருத்துவமனையில் முதுநிலை உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 31.12.2020 ஆம் தேதி நான் பணியில் இருந்தபோது இரவு 8:25 மணியளவில் மணியம்மாள் என்பவரை ராஜ்குமார் என்பவர் சிகிச்சைக்காக அழைத்து வந்திருந்தார். அவர் தன்னை தெரிந்த ஒரு நபர் அன்றைய தினமே மாலை 06.00 மணியளவில் தன் வீட்டின் அருகே கையால் அடித்ததாக கூறினார். நான் அவரை பரிசோதித்த போது அவருடைய இடது ஆள்காட்டி விரலில் 0.5 x 0.2 செ.மீ.அளவில் கிழிந்த காயம் இருந்தது. அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை வழங்கினேன். அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்று வழங்கினேன். தற்போது என்னிடம் காட்டப்படும் விபத்து பதிவேட்டு அறிக்கை மற்றும் காயச் சான்றிதழ் நான் வழங்கியதுதான்.(**விபத்து பதிவேட்டு அறிக்கை மற்றும் காயச்சான்றிதழ்**

**அ.சா.ஆ.3 மற்றும் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

ஒரு நபர் கடினமான பாறை அல்லது சொரசொரப்பான தரையில் கீழே விழுந்தால் மேற்கண்டவாறு அந்த நபருக்கு காயம் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது. காயத்தின் வயது குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

(Sd)/ S.R.Babu
Judicial Magistrate No.1,
Sankari.

(Sd)/ Murugavel